2005 செப்டம்பர் 22]

(ஆ) வியாசர்பாடி இரயில்வே கீழ்ப்பாலத்திற்கு மேல் ஒரு மேம்பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த (குறுக்கீடு) ஒன்றும் இல்லை. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை–கொல்கத்தா நெடுஞ்சாலையில் வியாசர்பாடி இரயில்வே பாலத்திற்கு மேல் ஒரு மேம்பாலம் கட்டவேண்டியதன் அவசியம்" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிக்கை

சென்னை–கொல்கத்தா சாலை (தேசிய நெடுஞ்சாலை எண் 5)-ல் கி.மீ. 4/1-ல் வியாசர்பாடியில் அமைந்துள்ள சாலை கீழ்ப்பாலத்தில் (Railway underpass) ஓடுதளம் தொழில்நுட்ப ரீதியில், அருகில் உள்ள பகுதிகளைக் காட்டிலும் தாழ்வாக அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் பருவமழைக் காலங்களில் இந்த கீழ்ப்பாலப் பகுதியில் பெருமளவு மழைநீர் சேர்ந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவது வாடிக்கையான ஒரு நிகழ்வாக இருந்து வந்த நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நவம்பர் 2002–ல் ஏற்பட்ட மழைச்சேதங்களைப் பார்வையிட்டபோது இந்த வியாசர்பாடி கீழ்ப்பாலம் பகுதியில் சேகரம் ஆகும் மழை நீரை அதிக அளவு விசைப் பம்புகளைக்கொண்டு வெளியேற்றிட வேண்டும் என உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் தற்பொழுது 72.5 குதிரைத் திறன் கொண்ட 5 நீர் இறைப்பான்கள் விநாடிக்கு 133.5 லிட்டர் தண்ணீரை வெளியேற்றும் வகையில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. நீர் இறைப்பான்கள் அமைக்கப்பட்ட பின்பு எந்த ஒரு மழைக்காலத்திலும் தண்ணீர் தேங்குவது அறவே தவிர்க்கப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 செப்டம்பர் 22

மேலும், ஆய்வின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் "தற்போதுள்ள கீழ்ப்பாலத்தில் கனரக வாகனங்கள் சென்று வர சிரமமாக இருப்பதால் அடிக்கடி ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் களையும் வகையில் ஒரு மேம்பாலம் அமைக்கப்படும்" என அறிவிப்பு செய்தார்கள். இதுகுறித்து இரயில்வே துறையை அணுகியபோது, பொதுவாக இரயில்வே சட்ட விதிகளின்படி ஏற்கெனவே இருக்கும் சந்திக்கடவுகளில் மேம்பாலம்/கீழ்ப்பாலம் அமைக்கும் பணிகளுக்கு மட்டுமே திட்ட மதிப்பீட்டில் இரயில்வே பங்களிப்பு ஏற்கப்படும் என்பதால், தற்போது மேம்பாலம் அமைக்கக் கோரும் இடத்தில் ஏற்கெனவே கீழ்ப்பாலம் இருப்பதால், இப்பணியை இரயில்வே துறையின் திட்டச் செலவில் பங்கேற்க இயலாது என்று இரயில்வே துறை தெரிவித்துள்ளது. ஆனால், இந்தப் பகுதியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, இப்பாலப் பணிக்கான மொத்தச் செலவாகிய ரூ.50.00 கோடியையும் மாநில அரசே ஏற்கும் வகையில் 2005–2006 ஆம் ஆண்டுக்கான சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ளதை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். 1688 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு இன்று 317 வயதாகிறது. பாரம்பரியமும், பழமையும் வாய்ந்த சென்னை மாநகரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற இந்த ஒன்பது ஆண்டுகளில் என்றென்றும் சென்னை என்னும் எழிலார்ந்த திட்டத்தின் மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று சென்னை மாநகரை நவீனமயமாக்கிக் காட்டியிருக்கின்ற, நவீனச் சிற்பி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) எழில் காத்த நாயகி எங்கள் அம்மா என்று எதிர்க் கட்சியினராலும் பாராட்டுகின்ற நிலை உருவாகியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

கடந்த 11–11–2002 அன்று சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினைப் பார்வையிட்டு சீர்கெட்டிருந்த அனைத்துப்

2005 செப்டம்பர் 22] [திரு. பி.கே. சேகர்பாபு]

பணிகளையும் செப்பனிட்டு, சீர் செய்து, பூத்துக்குலுங்கும் பூங்காவாக அந்தப் பகுதிகளை மாற்றி, கடந்த 16–9–2005 ஆம் தேதியன்று அனைத்துப் பணிகளையும் திறந்து வைத்து பார்வையிட்டார். சொல்வதைச் சொல்லியபடியே செய்து காட்டுகின்ற தன்னிகரில்லா தலைவி எங்கள் அம்மா என்பதை மீண்டும் நிரூபித்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டபோது மாநில அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்துப் பணிகளையும் இன்றையதினம் நிறைவேற்றிக் காட்டியிருக்கின்றார்கள். மத்திய அரசின் நிதிப் பங்கோடு செய்ய வேண்டிய சென்னை–கொல்கத்தா நெடுஞ்சாலையில் வியாசர்பாடி இரயில்வே பாலத்திற்கு மேல், மேம்பாலம் கட்டும் பணிக்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டிய நிதியினை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு கடந்த மூன்று ஆண்டுகள் நிறுத்தியிருந்ததால் இந்தப் பணி தடைபட்டிருப்பதை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேட்காமல் கொடுக்கின்ற மனம், கேட்டதெல்லாம் தருகின்ற குணம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தப் பாலம் கட்டுவதற்கு ஆகின்ற 50 கோடி ரூபாயையும் மாநில அரசே ஏற்க உள்ளதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அந்தப் பணி விரைவில் முழுமை பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆராதனைக்குரிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 117 மற்றும் 118–வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS